ரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.34/95

எனது இல.1/543 ஈ 02 டி/02/94(11)
அரசாங்க நிருவாக,உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில்,பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7
1995 நவம்பர் மாதம் 14 ஆந் திகதி.

சயலாளர்கள்,
ணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

அரச துறையைச் சேர்ந்த சிற்றூழியர்கள் தொழிலாளர் தரங்கள்
மற்றும் சாரதியாளர்கள் சேவைகளின் சம்பள மீளமைப்பு.

---

1992.12.24 ஆந் தேதிய 37/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை
ல் குறிப்பிட்டுள்ள தொழிலாளர் தரங்களுக்கான சம்பள அளவுத் திட்டங்களை மீளமைத்து வெளி
டப்பட்ட 1995.04.28 ஆந் தேதிய 14/95 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை
யும்,அரசாங்க சேவையின் சாரதியாளர்களுக்கான மீளமைக்கப்பட்ட சம்பள அளவுத் திட்டங்களை
றுபுடையனவாக கொண்டு வெளியிடப்பட்ட 1995.03.20 ஆந் தேதிய 29/94(1) ஆம்
லக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் மீதும் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. 1992.12.24 ஆந் தேதிய 37/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை
ல் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர் தரத்தின் 11 ஆம் 111 ஆம் வகுப்புகளின் சம்பள அளவுத்
ட்டங்களையும் ஏனைய சிற்றூழியர்களின் சம்பள அளவுத் திட்டங்களையும் பின்வருமாறு மீளமைப்ப
ற்கும் அந்தச் சம்பள மீளமைப்புக்களை 1995.11.01 ஆந் திகதி தொடக்கம் செயற்படுத்து
தற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

| ம்பளத் தொகுப்பு | அ.நி.சு.37/92இன் சம்பள அளவுத்திட்டம் | மீளமைக்கப்பட்ட சம்பள அளவுத் திட்டம். |
|---|---|---|
| ஸ்-1-1 | 21000-20×480-30600 | 25560-20×480-35160 |
| ஸ்-1-2 | 21480-15×480-5×660-31980 | 26040-15×480-5×660-36540 |
| ஸ்-1-3 | 22440-10×480-8×660-32520 | 2700-10×480-8×660-37080 |
| ஸ்-1-4 | 23160-23×660-38340 | 27960-23×660-43140 |

3. அரசசேவையின் மோட்டார் வாகனச் சாரதியாளர்கள் தொடர்பிலும் பின்வரும் சம்பள
ளவுத் திட்டங்களை 1995.11.01 ஆந் திகதி தொடக்கம் செயற்படுத்துவதற்கு அரசு தீர்மா
த்துள்ளது.

வலுக்கூடிய வாகனச் சாரதியாளர்கள் வகுப்பு 1 -
35640-6 × 780-9 × 1200-51120

வலுக்குறைந்த லொறிகள் மற்றும் வலுக்குறைந்த மோட்டார் வாகனச் சாரதியாளர்கள் - 11 "அ" வகுப்பு 29400-5 × 660
11× 780-41280

வழுக்குறைந்த வாகனச் சாரதியாளர்கள் - 11"ஆ" வகுப்பு 27960-23 x 660
43140

04. 1995.02.06 ஆந் தேதிய 3/95 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை
யின்படி தற்போது சம்பள மீளமைப்புகள் செய்யப்பட்டுள்ள பதவிகளுக்கு இந்த மீளமைப்பு ஏற்
யவையாகாது.

05. இலங்கை ஆசிரியர்கள் சேவை தொடர்பிலும் இந்த மீளமைப்புகள் ஏற்புடையவையாகா

06. புதிய சம்பளங்களுக்கு இப்போதுள்ள சம்பளங்களை மாற்றியமைத்தல் படி முறை அடிப்
படையில் செய்யப்படும். தற்போதைய சம்பளம் என்பது 24.12.1992 ஆந் திகதியில் வெளி
யிடப்பட்ட 37/92 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் உத்தியோகத்
தருக்கு கிடைக்கவுள்ள சம்பளம் எனப் பொருள்படும்.

07. இப்போதுள்ள வேதனவேற்றத் திகதிகளில் மாற்றங்கள் ஏற்படாது.

08. 1992.12.24 ஆந் தேதிய 37/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்
யின் சம்பள அளவுத் திட்டங்களின் கீழ் விதித்துள்ள வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் அதற்
புதிய சம்பள அளவுத் திட்டங்களுக்கு நேரொத்த படி நிலைகளில் செயற்படும்.

09. 1992.12.24 ஆந் தேதிய 37/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்
யில் குறிப்பிட்டுள்ளவாறு பதவிநிலை உத்தியோகத்தர் அல்லது கீழ் நிலை உத்தியோகத்தர் அல்
சிற்றூழியர் என்னும் வரைவிலக்கணம் மறு அறிவுறுத்தல் வழங்கும் வரை மாறாது.

10. அதுபோல் இச் சுற்றறிக்கையின் சம்பள மீளமைப்புகளை கருதாமல் இணைந்த படிகளுக்
உள்ள உரித்துகளும் புகையிரதச் சீட்டு உரித்துகளும் 1992.12.24 ஆந் தேதிய 37/92 ஆம்
இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின்படி மறுஅறிவுறுத்தல்கள் வழங்கும் வரை அமையும்.

11. உத்தியோகத்தரின் புதிய சம்பளத்திலிருந்து விதவை, அனாதைகள், ஒய்வூதியத் திட்டத்திற்
கும் தபுதாரர் அனாதைகள் ஒய்வூதியத் திட்டத்திற்குமான உதவு தொகை அறவிடுதல் 37/92
ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் நாற்று விதங்களின்படி செய்யப்பட வேண்டும்

12. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு 1995 ஆம் ஆண்டு வரவு செலவு ஒதுக்கீடுக
மூலம் வழங்கப்பட்டுள்ள மீண்டுவரும் ஒதுக்கீடுகளினால் மீளமைக்கப்பட்ட சம்பளங்கள் கொடுப்பன
செய்ய வேண்டும். மேலதிக ஒதுக்கீடுகள் தேவைப்படுமாயின் அத்தகைய மேலதிக ஒதுக்கீட்டுத்
தொகை கணிக்கப்பட்ட முறையை தெளிவுபடுத்திய விண்ணப்பமொன்றை பொது திறைசேரியின் வர
செலவு பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட அமைச்சு/திணைக்கள
திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் சேமிப்பு இருப்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்பு அல்லது வரவு செ
வுப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து ஒதுக்கீடு பெற்ற பின்பு தான் பற்று வைக்கப்பட வேண்டும்
உங்கள் ஒதுக்கீட்டுக்கு மேலதிகமான செலவுகளை ஈடு செய்ய வரவுசெலவுப் பணிப்பாளர்
நாயகம் நிதி ஒதுக்கமாட்டார் என்பது தெளிவாகக் கவனத்துக்கு எடுக்கப்படல் வேண்டும்.

13. இந்தச் சுற்றறிக்கை திறைசேரியின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

ஒப்பம்: ஆர்.எஸ்.ஜயரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.